**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகர்**

**அ.வ.எண்.272/2023**

நாள் : 03.06.2026

வா.சா.1 – ராமமூர்த்தி

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

நீங்கள் இந்த வழக்கை என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் – நான் பாகப்பிரிவினை கேட்டும், மேலும் 10, 11 இலக்க தபசில் சொத்துக்களை பொறுத்து ஏற்படுத்தப்பட்ட ஆவணத்தை இரத்து செய்யவேண்டுமென்றும் நான் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் எத்தனை இலக்க சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் – 1 முதல் 11 இலக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட 11 இலக்கங்ககளில் எவை எவை காலி இடம் மற்றும் வீடாக உள்ளது என்றால் – 1 முதல் 7 இலக்க சொத்துக்கள் விவசாய நிலமாகவும், 8,9 இலக்க சொத்துக்கள் வீட்டு கட்டிடங்களாகவும், நான் இரத்து செய்ய சொல்லக்கூடிய 10,11 இலக்க சொத்துக்கள் புஞ்சை நிலங்களாகவும் உள்ளது. மேற்கண்ட நீங்கள் குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில்தான் தெரியவந்தது என்றால் – சரிதான். எனக்கும், எனது மனைவிக்கும் இடையே 1975ம் வருடம் திருமணம் நடைபெற்றது. எனது சொந்த ஊர் ஓ.கோவில்பட்டி கிராமம் ஆகும். திருமணத்திற்கு பிறகு நீங்களும், உங்களது மனைவியும் குடியிருந்து வந்தீர்கள் என்றால் – நான் காவல்துறையில் பணிபுரிந்ததால், மதுரை, விருதுநகர், சிவகாசி, ராஜபாளையம் ஆகிய ஊர்களில் குடியிருந்து வந்தோம். நான் ராஜபாளையத்தில் இருக்கும்போதுதான் ஓய்வு பெற்றேன். இந்த தாவா தபசில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து இலக்க சொத்துக்களையும் நீங்களோ,

உங்களது மனைவியோ எந்த ஒரு காலத்திலும் அனுபவிக்கவில்லை என்று பிரதிவாதிகள் குறிப்பிடுகிறார்கள் என்றால் – அது சரியல்ல. 1ம் பிரதிவாதியின் கணவர் 1996 ல் இறந்தார். தபசில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து இலக்க சொத்துக்களும் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் – எனது மனைவியின் தாத்தா வெங்கடசாமிக்கு பாத்தியப்பட்டது ஆகும். மேற்கண்ட உங்களது மனைவியின் தாத்தா வெங்கடசாமி எந்த வருடத்தில் இறந்தார் என்றால் – அது எனக்கு தெரியாது. வெங்கடசாமி நாயக்கர் தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து ஏதேனும் விறுப்புறுதி ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் – எனக்கு தெரியாது. வெங்கடசாமி நாயக்கருக்கு எத்தனை ஆண் வாரிசுகள், பெண் வாரிசுகள் என்றால் – 3 ஆண் வாரிசுகள், 1 பெண் வாரிசு உள்ளார்கள். ஆண்வாரிசுகளின் பெயர் வீராச்சாமி, சீனிவாசன் மற்றும் இராமசாமி ஆகியோர் ஆவார். பெண் வாரிசு பெயர் வீரம்மாள் அவர் எனது தாயார் ஆவார். உங்களது பிராதில் மேற்கண்ட வெங்கடசாமி நாயக்கருக்கு ஒரே மகள் எனது தாயார் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்களா என்றால் – இல்லை.

குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**/Sd/ S.K.Angalaeswari**
கூடுதல் மாவட்ட நீதிபதி,
விருதுநகர்.